பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 22 வியாழக்கிழமை 06.03.2025 கதிர் 118

## இனி இது ரகசியம் அல்ல!

பழைய தமிழ்க் கூட்டமைப்பாக மீண்டும் இயங்குவது குறித்து புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் ஆகிய கட்சிகளுக்கு தமிழ் அரசுக் கட்சித் தலைவர் எழுதிய கடிதத்திற்கு புளொட் தலைவர் பதில் எ-ழுதியிருந்தார். அந்தப் பதிலுக்கான பதிலையும் தலைவர் சிவஞானம் தெரிவித்திருந்தார். இப்போது 2

### வடக்கு மக்களுக்கு நன்மை செய்யவேண்டின்

# மீனவர்கள் அத்துமீறலை இந்தியா முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்

### புதுடில்லிக்கு அமைச்சர் பிமல் அழுத்தம்

வடக்கு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கம் இந்தியாவுக்கு இருந்தால் இந்திய மீனவர்களின் சட்டவிரோத செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இந்திய சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தி இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வினை இந்தியா வழங்கவேண்டும். இந்திய பிரதமரின் விஜயத்தின் போது இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துவோம் என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் வடக்கு மாகாணத்தில்தான் அதிகளவான மீனவர்கள் உள்ளார்கள். அத்துடன் மீன்பிடி மற்றும் அதனுடனான தொழில்களில் அதிகளவானோர் ஈடுபடுகிறார்கள். வடக்கு பகுதியில் வாழும் மீனவர்கள் கஷ்டமான 2

## 679 படையினர் கைது

முப்படைகளில் இருந்து சட்டரீதியாக விலகாத 679 படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 22 முதல் நேற்று வரை பொலிஸார் மற்றும் இராணுவ பொலிஸார் இணைந்து முன்னெடுத்த சோதனைகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பாதுகாப்பு செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, முப்படைகளில் இருந்து தப்பியோடிய அனைவரையும் உடனடியாக கைது செய்ய உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

## தேர்தல் பணிகள் தொடங்கப்பட்டன

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோரிய பின்னர், அதன் ஆரம்பகட்ட பணிகளைத் தொடங்கியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஆகியோரை கொழும்புக்கு அழைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை (08) நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், 2

### அத்துமீறிய மீன்பிடியை உடன் நிறுத்துக

## வீதியில் இறங்கி போராடும் நிலையை வடக்கு மீனவர்களுக்கு ஏற்படுத்தாதீர்


### ரவிகரன் எம்.பி. ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை



அத்துமீறிய மீன்பிடிக்கு உடன் தீர்வு வேண்டும். இல்லையேல் வடக்கில் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மீனவ மக்கள் வீதியில் இறங்கி போராடுவார்கள். அந்த நிலையை ஏற்படுத்தாதீர்கள் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சபையில் எச்சரிக்கை 9

## மீனவர் பிரச்சினையை தீர்க்க இந்தியாவுடன் பேச வேண்டும்

### அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை



எமது கடல் எல்லைக்குள் இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல்களை நிறுத்துவதற்கு ஆளும்தரப்பு இந்திய மத்திய அரசு மற்றும் தமிழ் நாட்டு அரசுகளுடன் பேசவேண்டும். இந்தப் பிரச்சினையைக் காரணமாகக்கொண்டு இந்தியாவுடன் முரண்படுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. இதில் சீனாவின் தலையீடும் இருந்து வருகிறது என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 8

## இலங்கையைச் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தும் தீர்மானம் ஒன்றே அவசியம்

### கஜேந்திரகுமார் வலியுறுத்து



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எதிர்காலத்தில் கொண்டுவரப்படும் தீர்மானம் தமிழ் மக்களின் சம்மதத்தினை பெறவேண்டும் என்றால் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் ஏனைய சர்வதேச நீதி கட்டமைப்புகளிலும் பாரப்படுத்தும், புதிய தீர்மானம் அவசியம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 58 வது அமர்வில் இலங்கை குறித்த புதிய தீர்மானம் குறித்து இலங்கையில் உள்ள 2

## கிழக்கில் தீவிரவாதம் என்பதை ஆளும்தரப்பு விளக்கவேண்டும்

### பைசர் முஸ்தபா எம்.பி. வலியுறுத்து

தீவிரவாதியான சஹ்ரானின் சம்பவம் போன்ற மற்றொரு சம்பவம் இந்த நாட்டில் இனியொருபோதும் இடம்பெறக்கூடாது. கிழக்கில் அடிப்படைவாதம் என்ற கூற்றின் ஊடாக எம் மீது பழி சுமத்த பல தீய சக்திகள் முயற்சிக்கலாம். அமைச்சர்களின் கூற்றுக்களை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள இந்தச் சக்திகள் நிச்சயம் முயற்சிக்கும். கூற்றுக்களின் உண்மைத் தன்மையை ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் இதனைத் 8

## முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கைது

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று இரவு 11.30 மணிக்குக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது வீட்டில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவொன்றால் கைது செய்யப்பட்டார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிரிபத்கொட பகுதியில் வியாபார நிலையங்களை வழங்கிய சம்பவம் ஒன்று தொடர்பிலேயே அவர் 8

## போராட்டம் ஒத்திவைப்பு

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நாளை முன்னெடுக்கவிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக அறிவித்தது.

கொழும்பில் நேற்று பிற்பகல் செய்தியாளர்களிடம் இந்தத் தகவலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் பிரபாத் சுகததாஸ தெரிவித்தார்

தமது கோரிக்கைகள் மீது 8

## இலங்கை மீறல்கள் பற்றி ஆராயும் தன்முனைப்பு அரசிடம் இல்லை

### சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் உள்ளகப்பொறிமுறையின் ஊடாக இன்னமும் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாமல் இருப்பதானது, மீறல் குற்றங்கள் குறித்து ஆராய்வதற்கான தன்முனைப்பு அரசிடம் இல்லை என்பதையும், அதற்கு உள்ளகப்பொறிமுறை போதுமானது அல்ல என்பதையும் காண்பிப்பதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த 24 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரில் கடந்த திங்கட்கிழமை 8

## சம்பள உயர்வுப் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தலாம்

### அமைச்சர் மருத்துவர்களுக்கு அழைப்பு

சுகாதார சேவையாளர்களுக்கான சம்பள அதிகரிப்பினை ஒருசில தொழிற்சங்க தலைவர்கள் திரிபுப்படுத்தியுள்ளார்கள். வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பை முழுமையாக ஏற்றுக்கொள்ளுமாறு வைத்தியர்கள் மற்றும் துணைநிலை மருத்தாளர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். பிரச்சினைகள் காணப்படுமாயின் பேச்சு நடத்தலாம் என சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருளாதார பாதிப்புக்கு 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பதில் எழுதியுள்ளார்.

அவரது பதில் கடிதத்தில், ''எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல் சம்பந்தமான தங்களுடைய கடிதம் கிடைக்கப்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் இணைந்து செயலாற்றுவது சம்பந்தமாக தங்களுடைய விருப்பத்தை அதில் வெளிப்படுத்தியிருந்தீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒன்றான எமது கட்சி பல்வேறு விதமான சவால்கள் விமர்சனங்கள் இடையூறுகள் எல்லாவற்றையும் தாண்டி எமது மக்களின் இன நலன் சார்ந்து ஒற்றுமையாகவும் பலமாகவும் அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்பதில் பல விட்டுக் கொடுப்புக்களோடும் சகிப்புத்தன்மையோடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தொடர்ந்தும் பயணித்து வருகிறது.

2023இல் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக தங்களுடைய மத்திய குழு, வவுனியாவிலும் பின்னர் இறுதியாக மட்டக்களப்பிலும் எடுத்த ஏகோபித்த முடிவிற்கமைய தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது.

எமது கட்சியும், புளொட் அமைப்பும் அந்த நேரத்தில், தேர்தல் நலன்கள், வெற்றி தோல்விகள், அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்ளல் என்பவற்றைத் தாண்டி இன நலன் சார்ந்து ஒருமித்து பயணிக்க வேண்டிய கட்டாயத்தை தங்கள் கட்சித் தலைமையிடம் வலியுறுத்தியபோதும் தங்களது கட்சி மத்தியகுழுவின் முடிவே இறுதியானது, என உறுதியாகத் தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை அறிவித்தீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நலிவடையாமல் தொடர்ந்தும் பாதுகாப்பதன் நோக்கத்தோடு தமிழ் தேசிய பரப்பில் இருந்த கட்சிகளோடு ஒன்றிணைந்து கூட்டணியாக நாம் பயணித்துக் கொண்டிருப்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முகம் கொடுத்திருக்கும் நமது இனம் தேர்தல் நலன்களை மாத்திரம் முக்கியப்படுத்தும் இந்தப் பிரிவின் மூலம் எதிர்காலத்தில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதை தீர்க்கமாக நாம் எதிர்வு கூறி இருந்தோம். இன்று அந்த நிலைக்கு எங்களுடைய இனம் தள்ளப்பட்டிருப்பதை நன்கு உணர்ந்து, இணைந்து செயல்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி தாங்கள் முன்வைத்துள்ள அழைப்பை நாங்கள் வரவேற்கிறோம். இன நலத்திற்காக விட்டுக்கொடுப்போடு பயணிப்பதற்கு நாம் எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

விடுதலைப் போராட்ட காலத்தில் இருந்தே அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்பது எமது இனத்துக்கு நலன் பயக்கும் என்ற கொள்கையோடு ரெலோ, ஈபி ஆர் எல் எப், ஈரோஸ் ஆகியோருடன் விடுதலைப் புலிகளையும் இணைத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எவ்) என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்கள் நாங்கள்.

மேலும் 2024இல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் நாம் மக்கள் நலன் சார்ந்து ஒன்றிணைந்து விட்டுக் கொடுப்போடு வெற்றி தோல்விகளை கருத்தில் கொள்ளாது பயணித்தமையையும், அம்பாறை மாவட்டத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாடு தங்கள் கட்சியின் நிலைப்பாட்டால் தொடரமுடியாமல் போன துரதிர்ஷ்டமான சூழலையும் கவலையுடன் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தங்கள் அழைப்பை ஏற்று எமது கூட்டணியின் அங்கத்துவ கட்சிகளோடும் கலந்தாலோசித்து ஒன்றிணைந்து பயணிப்பது சம்பந்தமான தீர்க்கமான ஒரு முடிவை நாம் எட்ட நாம் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தில் வெளிப்படையாக தமிழ் அரசின் தலைவர் சிவஞானத்தின் அழைப்பை ஏற்றுக்கொள்வது போன்று பாவனை காட்டப்பட்டாலும் நாசூக்காக அதை மறுத்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைவிட்டு நாங்கள் வரமாட்டோம், நாம்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுமானால் நீங்கள் வந்து அதில் இணைந்துகொள்ளுங்கள் என்ற, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முந்தைய பதில்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒன்றிணைந்து பயணிப்பது தொடர்பில் எமது கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளோடு கலந்துரையாடி தீர்க்கமான முடிவைத் தருகிறோம் என்று செல்வம் அடைக்கலநாதன் தனது கடிதத்தின் கடைசிப் பகுதியில் தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதற்கு ஏற்கனவே சமாதி கட்டியாகிவிட்டது, இனி புதிய கூட்டணிதான் என்பதை அவர் மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார். இதே அடைக்கலநாதன்தான் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு மீண்டும் கூட்டமைப்பாகச் செயற்படவேண்டும் என்று துடியாய் துடிப்பதாகக் காட்டிக்கொண்டவர். மீண்டும் மீண்டும் அது பற்றிப் பேசித் திரிந்தவர் என்பதை மறந்துவிடக்கூடாது. அதற்காகப் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளை மட்டங்களிலும் இரகசிய கலந்துரையாடல்களை ரெலோ நடத்தியது. ஆனால் அந்தக் கலந்துரையாடல்களில், மீண்டும் இணைந்தால்கூட தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கு நெருக்கமான குற்றப் பின்னணி கொண்ட பலருக்கும் தமிழ் அரசுக் கட்சியினர் கதவடைப்புத்தான் என்று திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுத்திருந்ததன் பின்னணியில் இன்று இப்படியொரு பதிலை தமிழ் அரசுத் தலைவருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்.

ரெலோ மட்டுமல்ல புளொட்டும்கூட மநாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததுமே மீண்டும் தமிழ் அரசுக் கட்சியோடு ஒட்டுவதற்குப் பரபரத்துத் திரிந்தது. அப்போது தலைவராக இருந்தவரான மாவையர் உட்படப் பலரோடும் இரகசியமாக இது குறித்துக் கலந்துரையாடி இருக்கிறது. ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் இப்போது பகிரங்கமாக அழைப்பு விடுக்கும்போது இந்த இரு கட்சிகளுமே பிகுபண்ணிக் கொள்கின்றன.

இப்படிச் சணம் பித்தம் சணம் வாதம் என்று நிற்கும் தலைவர்கள் தலைமையிலான கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதென்பது, அதுவும் மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் இவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு ஒரே முடிவை எடுப்பதென்பது மலையைக் கெல்லி எலி பிடிக்கும் கதைதான் என்பது இப்போது மக்களுக்கு நன்கு புரியும். இவர்களை வைத்துக்கொண்டு 13 வருடங்களை ஒற்றுமையின் பெயரால் ஓட்டிய பெருந் தலைவர் சம்பந்தரின் ஆளுமை, கூட்டமைப்பைச் சிதைத்துவிட்டார் என்று அவரைக் குற்றஞ்சாட்டுபவர்களுக்கு இப்போதாவது புரியும் என்று கருதலாம்.

இதேவேளை, பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளோடு மீண்டும் கூட்டுச் சேர்வது குறித்துத்தான் தனது அழைப்பும் முயற்சியும் இருந்ததே தவிர, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு கூட்டு வைத்துக்கொள்வது குறித்தல்ல என்று தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானம் ஏற்கனவே தெளிவாகத் தெரிவித்துவிட்டார். ''அவர்கள் கட்சிகளின் கூட்டணியாக இ-ருப்பது அவர்களின் உரிமை, சுதந்திரம். அது குறித்து நான் கவலைப்படவுமில்லை, அக்கறைப்படவுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் சேர்ந்தியங்குவது குறித்ததே எனது முயற்சி'' என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். இப்போது அந்த அழைப்பை புளொட் மற்றும் ரெலோ ஆகியன எதிர்த்திருப்பதன் மூலம், இத்தோடு 'ஒற்றுமை' என்ற ஏமாற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது. இருந்தாலும் மாகாண சபைத் தேர்தல் வரும்போது மீண்டும் மக்களை ஏமாற்ற இதே 'ஒற்றுமை' கோசத்தை கையிலெடுக்கவும் இந்தத் தலைவர்கள் தயங்கமாட்டார்கள் என்று உறுதியாக நம்பலாம். அதற்கு உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் இவர்களுக்கு கொடுக்க இருக்கும் "முறையான கவனிப்பு" அவர்களை மீண்டும் உந்தித்தள்ளும். தமிழ் அரசுடன் பின்கதவுப் பேச்சுக்களைத் திறக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மன்னார், முல்லைத்தீவில்

# தீயணைப்புப் படை அமைக்க ரூ. 60 மில்லியனில் திட்டம்

முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் கரைதுறைப்பற்று பிரதேச சபை அதிகார பிரதேசம் மற்றும் மன்னார் நகர சபை அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதியில் தீயணைப்பு பிரிவு அமைப்பதற்காக உலக வங்கியின் உதவியுடன் 60.5 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபேரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளை 27/ 2 இன் கீழ் கேள்வியெழுப்பி உரையாற்றிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இதனைக் குறிப்பிட்டார்.

"முல்லைத்தீவு மன்னார் பிரதேசங்களில் தீயணைப்பு படை என்பதொன்று இல்லை. முல்லைத்தீவு நிலப்பரப்பில் பெரிய மாவட்டமாக இருக்கின்ற நிலையில் அங்கு மக்கள் தீயால் பாதிக்கப்படுகின்றபோது அல்லது கடைத் தொகுதிகள் எரியும்போது யாழ்ப்பாணம் அல்லது வவுனியாவில் இருந்தே தீயணைப்பு வாகனங்கள் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்புபடையை ஆளும்தரப்பு உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை கடந்த ஆட்சியிலேயே முன்வைத்திருந்தபோதும் இன்னும் அது நடக்கவில்லை. அதனால் புதிய ஆளும்தரப்பிடம் அந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் கடைகள் பல தீக்கிரையான பின்னரே வவுனியாவில் இருந்து தீயணைப்புப் படை வருகின்றது. இந்த மாவட்டத்திலும் தீயணைப்புப் படை இல்லாமையினால் அங்குள்ள மக்களும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் குறித்த மாவட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகின்றோம்" என்றார்.

இதற்கு பதிலளித்த பொதுநிர்வாக, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபேரத்ன நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் முன்வைத்த விடயம் சரியானதே. மன்னாரில் மட்டுமன்றி நாட்டில் இன்னும் பல பிரதேசங்களில் நிலவும் பிரச்சினையாக இது உள்ளது.

அவர் முன்வைத்துள்ள பிரச்சினை தொடர்பில் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். உள்ளூராட்சி நிறுவனங்களில் தீயணைப்புக்காக மத்திய ஆளும்தரப்பிடம் நிதிவழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் தேவையான உபகரணங்களை வழங்க கொரியா இணக்கம் தெரிவித்துள்ளது. முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் கரைதுறைப்பற்று பிரதேச சபை அதிகார பிரதேசம் மற்றும் மன்னார் நகர சபை அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதியில் தீயணைப்பு பிரிவை அமைப்பதற்காக உலக வங்கியின் உதவியுடன் 60.5 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கூடிய விரைவில் அவை அமைக்கப்படும் என்றார்.

## மீனவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கை முறைமையில்தான் உள்ளார்கள். கடற்றொழிலை மேம்படுத்துவதை போன்று அந்த தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த வேண்டும். அதற்கான பொறுப்பு கடற்றொழில் வளங்கள் அமைச்சுக்கு உண்டு.

வரவு-செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி மற்றும் அதனுடான இணை கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. வடக்கில் அதிகளவான கடற்றொழிலுடன் தொடர்புடைய வளங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் தெற்கில் உள்ள மீனவர்களை காட்டிலும் வடக்கில் உள்ள மீனவர்கள் வாழ்வாதார ரீதியில் கஸ்டப்படுகிறார்கள்.

இந்திய மத்திய அரசிடமும், தமிழ்நாடு அரசிடமும் விசேட கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். போர் மற்றும் பல்வேறு காரணிகளால் இலங்கையர்கள் படகு ஊடாக அவுஸ்ரேலியாவுக்கு செல்லும்போது அவுஸ்திரேலிய அரசு 'படகு ஊடாக அவுஸ்ரேலியாவுக்கு வர வேண்டாம்' என்று பல விளம்பரங்களை அழுத்தமாக வெளியிட்டது. அத்துடன் சட்ட ரீதியிலான அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.

மீன்பிடி கைத்தொழிலை தவிர்த்து வடக்கு மக்களுக்கு வேறு எந்த கைத்தொழில்களும் கிடையாது. வடக்கு மக்களின் ஒரே ஜீவனோபாயத்தை இல்லாதொழிக்க இடமளிக்க வேண்டாம் என்று இந்திய அரசிடம் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். இந்தியாவில் உள்ள சட்டங்களைச் செயற்படுத்துங்கள். இவற்றைச் செயற்படுத்தாமல் வடக்கு மக்களின் நலன்புரி பற்றிப் பேசமுடியாது - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ''உங்களின் கருத்து மிகவும் முக்கியமானது, இந்திய பிரதமர் எதிர்வரும் மாதம் இலங்கைக்கு வருகைத் தரவுள்ளார். ஆகவே தயவு செய்து பேச்சு ஒழுங்கில் இந்த விடயத்தையும் இணைத்துக்கொள்ளுங்கள்.

வடக்கு மக்களுக்கு இது பெரும் பிரச்சினை. எமது சொத்துக்களை கொள்ளையடித்துச் செல்கிறார்கள். போர் முடிந்து 15 வருடங்கள் ஆகி விட்டது. இந்தியா உதவி செய்தது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே இந்த பிரச்சினைக்கு உடன் தீர்வு காணுங்கள். நாங்களும் ஒத்துழைப்பு வழங்குகிறோம்'' என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இது பாரதூரமான பிரச்சினை. அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளை இந்திய அரசால் நிறுத்த முடியும். இந்திய அரசு இலங்கைக்கு பல உதவிகளைச் செய்கிறது. வடக்கு மக்களின் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் வழங்கும் உதவிகள் உண்மையானதாக அமையாது.

இந்திய மீனவர்களின் எல்லை மீறல் செயற்பாடு நாளாந்த பிரச்சினையாகவே காணப்படுகிறது. இந்திய அரசு இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். மக்கள் சுதந்திரமாக தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கவேண்டும்- என்றார்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நடைபெறும் தேர்தல் ஆணைக்குழு கூட்டத்தில் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரும் அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர் தேர்தல் ஆணைக்குழு கூடுவது இதுவே முதல் முறையாகும்.

தேர்தல் தொடர்பான திட்டங்கள் மற்றும் அது தொடர்பாக எழும் பிரச்சினைகள் குறித்து இங்கு கலந்துரையாட திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் எதிர்வரும் 12 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான காலக்கெடு நீட்டிக்கப்படாது என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதற்கிடையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# 'அழகான குடும்பமும் சிறந்த பிள்ளை வளர்ப்பும்' சாய்ந்தமருதுப் பாடசாலைகளில் கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட கமு/கமு/மழ்ஹருல் ஷம்ஸ் மகா வித்தியாலயம் மற்றும் கமு/கமு/ எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான ரமழான் கால சிறப்பு நிகழ்ச்சி குறித்த பாடசாலைகளில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.





'அழகான குடும்பமும் சிறந்த பிள்ளை வளர்ப்பும்' எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் பெற்றோர்கள், குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சிக்கான முக்கியமான கருத்துகளைப் பெற்றதுடன் குடும்பப் பிணைப்பு, சிறந்த பெற்றோராக விளங்கும் வழிகள், குழந்தைகளின் போசாக்கு , கல்வி, பாதுகாப்பு மற்றும் நற்பண்புகளை ஊக்குவிக்கும் முறைகள் பற்றிய பயனுள்ள விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.மு.ஆபிக்கா, கல்முனை கல்வி வலய அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், உலமாக்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொது சுகாதார மருத்துவ மாது மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாது ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நோன்புக்கஞ்சி விநியோகிக்கும் பள்ளிவாசல்ககளில் சோதனை

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட உணவகங்கள் மற்றும் நோன்புக்கஞ்சி தயாரித்து விநியோகம் செய்யும் பள்ளிவாசல்கள் முதலானவை செவ்வாய்க்கிழமை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களான ஜே.எம். நிஸ்தார், ஏ.எல்.எம். அஸ்லம், ஏ. வாசித் அஹமட் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் முதலானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது உணவகங்களில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் உணவைக் கையாண்ட இரண்டு உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதுடன் மனிதநுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவ் உணவுப் பண்டங்கள் உணவக உரிமையாளரின் அனுமதியுடன் அழிக்கப்பட்டன.

மேலும் பொதுமக்கள் உணவு கையாளும் நிறுவனங்களில் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை உடனடியாக அறிவிப்பதற்கு கியு.ஆர். ஸ்டிக்கரும் உணவகங்களில் ஒட்டப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.





# ரமழான் மாதத்தினை முன்னிட்டு உலர் உணவுப் பொருள் அன்பளிப்பு

( ஹலால்தீன், சனோபர்)

ரமழான் மாதத்தை முன்னிட்டு ஸகாத் பெறதகுதியானவர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.



கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிற்குள் தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கான



உலர் உணவுப் பொருள்களே முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் செவ்வாய்க்கிழமை கிண்ணியா மத்திய கல்லூரி வளாகத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி, பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜிப், முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் அதிகாரிகள், பிரதேச செயலக ஊழியர்களும் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறையில் நோன்புக் காலத்திற்கான நாபீர் பௌண்டேசனின் உலருணவு விநியோகம்

(நூருல் ஹுதா உமர்)

வருடாவருடம் நாபீர் பௌண்டேசன் மேற்கொள்ளும் புனித ரமழான் நோன்பு காலத்திற்கான உலருணவு விநியோகம் திங்கட்கிழமை மாலை சம்மாந்துறை புறநகர் பகுதியில் நாபீர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் பிரபல சமூக செயற்பாட்டாளரும் பொறியியலாளரான உதுமான் கண்டு நாபீர் தலைமையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வானது பிரதான மார்க்க சொற்பொழிவுடன் கிறாஅத் ஓதப்பட்டு ஆரம்பமானதுடன் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது நிகழ்வின் ஏற்பாட்டாளர் உதுமான் கண்டு நாபீர் தற்சார்பு பொருளாதாரத்தின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றியதுடன் சகல மக்களும் நாட்டின் அபிவிருத்திக்காக கைத்தொழில் ஒன்றினை மேற்கொள்ளுதல் வேண்டும் என கேட்டுக்கொண்டார். நிகழ்வில் ஊடகவியலாளர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த உலருணவு பொருள்களில் அரிசி உள்ளிட்ட பொருள்கள் உள்ளடங்குவதுடன் சுமார் இதுவரை 100 இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு இப்பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஒரே குட்டையில் ஊறிய...

இலங்கையில்அதிகரித்துவரும்வன்முறைகளுக்குமத்தியில்தண்டனை விலக்களிப்பு குறித்து ஆளும்தரப்பின் உறுதியான நடவடிக்கை தேவை என்று அனைவருக்கமான நீதி என்ற அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பாதாள உலகக் குழுக்களிடையிலான மோதலாக ஆளும்தரப்பாலும் சட்டம் ஒழுங்கு அமுலாக்கல் நிறுவனங்களாலும் சொல்லப்படும் தொடர் கொலைகள் மற்றும் காவல்துறையினரின் பாதுகாப்பில் இருந்த சந்தேகநபர்கள், வழக்கமான பாணியில் ஆயுதங்களை எடுக்கச் சென்றபோது காவலர்களைத் தாக்க முயன்றார்கள் என்ற போர்வையில் சுட்டுக்கொல்லப்பட்டமை ஆகியன குறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தண்டனை விலக்களிப்புக்கு எதிரான உறுதியான நடவடிக்கையை அது நாடி நிற்கின்றது.

அந்த அறிக்கையில், ”இந்தக் கொலைகள் மற்றும் பிற கொலைகள், தங்கள் காவலில் உள்ளவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதிலும், நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிப்பதிலும் தங்கள் கடமையில் இருந்து தவறிய காவல்துறை மற்றும் சிறை அதிகாரிகள் போன்ற அரசு நிறுவனங்களைச் சேர்ந்தோரின் பொறுப்புக் குறித்து பல கேள்விகளை எழுப்புகின்றன.

இந்தக் கொலைகள் நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை மோசமடைந்து வருவதைச் சுட்டிக்காட்டுகின்றன, இது இலங்கையில் ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் அம்பலமாகி வரும் ஒரு நிலை” என்று தெரிவித்திருக்கின்றது அனைவருக்குமான நீதி அமைப்பு.

”முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பொருளாதார நெருக்கடி, உயரடுக்கினர் இயக்கும் அரசியல் ஆட்சி, வேரூன்றிய ஊழல் மற்றும் சட்டத்தின்ஆட்சியின்பலவீனம்ஆகியவை இலங்கையர்களை ஒர் முறைமை மாற்றத்திற்காகவும், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய அரசியல் கலாசாரத்திற்காகவும் போராடத் தூண்டின. 2024ஆம் ஆண்டில், இந்தக் கோரிக்கை அரசுத் தலைவர் அனுர குமார திசாநாயக்கவிற்கும் தேசிய மக்கள் சக்திக்கும் (ஹிஊணஊண) ஒரு மகத்தான ஆணையைப் பெற்றுத் தந்தது. மக்களின் இந்தத் தேர்தல் வெளிப்பாடு, பல வகையான வன்முறைகள் மற்றும் அப்பட்டமான தண்டனை விலக்குரிமை ஆகியவற்றில் கடந்த காலத்திலிருந்து ஓர் இடைவெளியைக் குறிக்க முயன்றது. நீதிமன்ற வளாகத்திற்குள் நடந்த கொலை உட்பட சமீபத்திய கொலைகள், தனிநபர்களும் அரசு அதிகார நிறுவனங்களும் தொடர்ந்து தண்டனை விலக்குரிமையுடன் செயல்படுகின்றன என்பதைக் குறிக்கின்றன, ஆளும்தரப்பு மாறினாலும் அதைத் தொடர முடியும் என்று நம்புகின்றன. சட்ட அமுலாக்க நிறுவனங்களின் சில பிரிவுகளிடையே வேரூன்றிய ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் நீண்ட காலமாக சித்திரவதை, தண்டனை விலக்குரிமையுடன் மேற்கொள்ளப்படும் ’என்கவுண்டர்’ கொலைகளில் வெளிப்படுகிறது.

இத்தகைய பின்னணியில், சட்ட அமலாக்க நிறுவனங்களின் சில பிரிவுகளால் அரசு அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதை கண்டித்து, விரைவான நடவடிக்கை மற்றும் பொறுப்புக்கூறலைக் கோருவது நம் அனைவரின் கடமையாகும். குறிப்பாக அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தும் தனிநபர்கள் மற்றும் இந்த வன்முறை நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு ஆளும்தரப்பிற்கு உள்ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அல்லது இதே போன்ற அசாதாரண காவல்துறைஅதிகாரங்களைநம்பிஅதிகாரதுஷ்பிரயோகம்செய்வதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதும் மிகவும் முக்கியம். இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் பற்றிய பொதுத் தகவல் தெளிவாகவும், வழக்கமாகவும் இருக்கவேண்டும், மேலும் பொதுமக்களின் நம்பிக்கையை வளர்க்க தகவல்களை வழங்கவேண்டும். நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள சுயாதீன செயல்முறைகள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துவதும் இதன் விளைவாக நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியை உருவாக்குவதும் முக்கியம்” என்று அறிக்கை வலியுறுத்துகின்றது.

போர்க் காலம் முதலே இலங்கை தண்டனை விலக்களிப்பிற்குப் பெயர்போனதொரு நாடாக இருந்து வருகிறது. ஆளும்தரப்பினரின் அனுசரணை ஆசீர்வாத்தோடு நீதிக்குப் புறம்பான கொலைகளைச் செய்தவர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொலைகளில் பல அவர்களின் அரசியல் நலன்களோடு தொடர்புடையவையாகக் காணப்பட்டதன் காரணத்தால் கொலையாளிகள் பாதுகாக்கப்பட்டனர். இது இலங்கையின் சட்டம் ஒழுங்கு காவலர்கள் மீதும் நீதித்துறையின் மீதும் மக்களுக்கு நம்பிக்கையற்ற நிலையை ஏற்படுத்தியது. இதில் மாற்றம் வேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். அதற்காகவே ’முறைமை மாற்றத்திற்கு’ வாக்களித்த தேசிய மக்கள் சக்தியை ஆட்சியில் அமர்த்தினர். ஆனால், முன்னைய அரசியல் கலாசாரத்தில் இருந்து இந்த ஆட்சியும் வேறுபட்டதல்ல என்பதையே நடக்கும் சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன என்பதையே அனைவருக்குமான நீதி அமைப்பின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையில் காலச் சக்கரத்தில் சுழன்று மாறி மாறி ஆட்சிக்கு வருபவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே என்பதையே அறிக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது.

# மாகாண தேர்தல் நீண்டகாலமாக நடத்தப்படாமல் உள்ளது இது மக்களாட்சி கோட்பாட்டை மறுக்கும் ஒரு செயலாகும்

## முன்னைய அரசு விட்ட தவறை இந்த அரசும் விடக்கூடாது என்கிறார் குகதாசன்




(ஹஸ்பர்)

மாகாண சபைத் தேர்தல் நீண்டகாலமாக நடத்தப்படாமல் உள்ளது . இது மக்களாட்சி கோட்பாட்டை மறுக்கும் ஒரு செயலாகும். எனவே முன்னைய அரசுகள் விட்ட தவறுகளை இந்த அரசும் விடாமல் மாகாணசபைத் தேர்தலை மேலும் தாமதமின்றி நடத்த வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

வரவு செலவு திட்ட விவாதத்தில் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

பொது நிருவாக அமைச்சின் கீழ் நான் பிரதிநிதித்துவ படுத்தும் திருகோணமலை மாவட்டத்திற்கு 1083 மில்லியன் ரூபா மீண்டுவரும்செலவுக்காகவும்168மில்லியன் ரூபாமூலதனசெலவுக்காகவும்மொத்தமாக 1251 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 275 மில்லியன் ரூபா குறைவானதாகும்.

மாவட்டத்தில் நிலவுகின்ற மேற்படி துறைசார் தேவைகளை கருத்திற் கொண்டு மாவட்டத்திற்கான மூலதன நிதி பன்மடங்காக அதிகரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாவட்டத்திலே பொது நிருவாக அமைச்சின் கீழ் இருக்க வேண்டிய அரசு பணியாளர் தொகை 1265 ஆகும். இருப்போரது எண்ணிக்கை 1134 ஆகும். 131 பணியாளர் பற்றாக்குறை காணப்படுகிறது . இதில் 17 பதவி நிலை அதிகாரிகளும் அடங்குவர். இந்த அதிகாரிகள் இல்லாமல் நிருவாகத்தை நடத்துவது மிகவும் சிக்கலாக உள்ளது. எனவே மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மாகாண சபை ஆனது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட ஒரு துணை அரசாங்கம் குறித்த ஓர் ஏற்பாடாகும்.

அதிகார பகிர்வினையும் மக்கள் பங்குபற்றுதலையும் முதன்மையான கருப்பொருளாகக் கொண்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.

மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பொழுது அவற்றுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சில முழுமையாகவும், பல பாதியாகவும் மத்திய அரசால் மீளப் பெறப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக கமநல சேவைத் துறையை மத்திய அரசு முழுமையாக எடுத்துக்கொண்டது. கல்வி,மருத்துவம், விவசாயம்,நீர்ப்பாசனம் முதலிய துறைகளில் கணிசமான பகுதிகள் மாகாண சபையிடமிருந்து மத்திய அரசு எடுத்துள்ளது.

இது கவலை தரக்கூடிய விடயமாகும்.

பல நாடுகளில், மாகாண சபைகள் பள்ளிக்கூடங்களை மட்டுமன்றிப் பல்கலைக் கழகங்களையும் நடத்துகின்ற சூழலில் தேசியபாடசாலை என்ற பெயரில் மாகாண சபைகளின் கீழுள்ள பள்ளிக்கூடங்களில் பாதியை மத்திய அரசு பறித்து எடுத்துக் கொள்வது ஒரு நியாயமான செயற்பாடு அல்ல. மாகாணசபையிலிருந்து மத்திய அரசு எடுத்துக்கொண்ட துறைகளை மாகாண சபைகளுக்கே மீள கையளிக்க வேண்டும். அத்தோடு மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

மேலும் மாகாண சபைத் தேர்தல் நீண்டகாலமாக நடத்தப்படாமல் உள்ளது . இது மக்களாட்சி கோட்பாட்டை மறுக்கும் ஒரு செயலாகும். எனவே முன்னைய அரசுகள் விட்ட தவறுகளை இந்த அரசும் விடாமல் மாகாண சபைத் தேர்தலை மேலும் தாமதமின்றி நடத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது நாட்டில் உள்ள, மாகாண சபைகள் அதிகாரங்கள் அற்ற சூழலில் தமது ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க மத்திய அரசிடம் இருந்து நிதி கேட்க வேண்டிய சூழலில் உள்ளன.

எமது அயல் நாடான இந்தியாவில் மகாராஷ்ரா, தமிழ்நாடு முதலிய மாகாணங்கள் மத்திய அரசிற்கு நிதி வழங்கும்அளவிற்கு பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளதனை நாம் காணலாம். இதற்கு அங்கு மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டு இருப்பதே காரணமாகும்.

அதேபோல எமது மாகாண சபைகளுக்கும் கூடுதல் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டால் அவைகளும் மத்திய அரசுக்கு நிதி அளிக்கக்கூடிய சூழல் உருவாகும்.

உலகில் உள்ள பல நாடுகளில், மத்திய அரசிடம் கல்வி,சுகாதாரம் முதலிய அமைச்சுக்களே இல்லை. அவை அனைத்தும் மாகாண சபை அல்லது மாகாண அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதனை இந்த இடத்தில் நினைவூட்ட விரும்புகின்றேன்.

நான் பிரதிநிதித்துவப்படுத்தும் திருகோணமலை மாவட்டம் அமைந்துள்ள கிழக்கு மாகாணத்திற்கு 2025 ஆம் ஆண்டுப் பாதீட்டில் மீண்டுவரும் செலவாக 47,603 மில்லியன் ரூபாவும் மூலதன செலவாக 8667 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. மூலதன செலவானது கடந்த ஆண்டினை விட 3813 மில்லியன் ரூபா அதிகமானதாகும். இது பாராட்டக்கூடிய விடயமாகும். எனினும் கிழக்கு மாகாணத் தேவைகளோடு ஒப்பிடும் பொழுது இந்த ஒதுக்கீடானது யானைப் பசிக்கு சோளப்பொரி போட்ட கதையாகவே காணப்படுகிறது. எனவே மூலதன நிதி மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

பாதீட்டின் வாயிலாக மூலதன நிதியை மேலும் அதிகரிக்க முடியாவிட்டால் வேறு வழிமுறை மூலம் மாகாண சபையின் மூலதன செலவுக்கு நிதி கிடைக்க ஆவன

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# மாகாண தேர்தல்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

செய்ய வேண்டும்.

கிழக்கு மாகாண சபையின் கீழ் இருக்க வேண்டிய அலுவலர் தொகை 4863 ஆகவும் இருப்போரது எண்ணிக்கை 4217 ஆகவும் 646 பணியாளர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்த அலுவலர்கள் இல்லாமல் நிர்வாகத்தை நடத்துவது மிகவும் சிக்கலாக உள்ளது. ஆகவே மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சிச் சபைகளில் பெரும்பாலான சபைகள் வைத்துள்ள குப்பை அள்ளும் வாகனங்கள் பயன்பாட்டிற்கு ஒவ்வாதவையாகக் காணப் படுகின்றன. இவற்றுக்கு மாற்று வாகனங்கள் வழங்கப்படா விடின் உள்ளூராட்சிச் சபைகள் தத்தம் துப்புரவு பணிகளை செய்ய முடியாத சூழல் ஏற்படும். இதைத் தவிர்க்கும் பொருட்டாக குப்பை அகற்றுவதற்காக குறைந்தது பெட்டிகளுடன் கூடிய உழவு எந்திரங்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அத்தோடு பல உள்ளூராட்சிச் சபைகளுக்கு தீயணைப்பு ஊர்திகள், மனித கழிவுகளை அள்ளும் ஊர்திகள் இல்லை. எனவே மக்களின் நன்மை கருதி இவை கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பேரிடர் காலங்களில் வெள்ள நீரை அகற்றுதல், பாதைகளை மறுசீரமைத்தல் முதலிய பணிகளுக்கு பயன்படுத்தப்படும் ஜேசிபி முதலிய கனரக வாகனங்கள் பல உள்ளூராட்சிச் சபைகளில் இன்மையால் குறித்த உள்ளூராட்சிச் சபைகள் பெரிதும் இடர் படுகின்றன. எனவே மேற்படி வாகனங்கள் கொண்டிராத உள்ளூராட்சிச் சபைகளுக்கு அவை வழங்கப்பட வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சிச் சபைகளில் தொழில்நுட்ப அலுவலகர்கள், பொதுச்சுகாதார அலுவலகர்கள், வரி அறவீட்டு அலுவலகர்கள், நூலக உதவியாளர்கள் மற்றும் பதவி நிலை அலுவலகர்கள் ஆகியோரது பற்றாக்குறை பெரிதும் காணப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட பதவிகளில் 50 வீதமானவை வெற்றிட்டங்களாகக் காணப்படுகின்றன.

இப்பதவிகளுக்கு உரிய அலுவலகர்களை நியமிக்காவிடின் உள்ளூராட்சிச் சபைகள் தனது பணிகளைச் செய்ய முடியாத சூழல் ஏற்படும். எனவே மேற்படி துறைசார் பணியாளர்களை தாமதம் இன்றி நியமிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சிச் சபைகளில் பணிபுரிந்த ஏறத்தாழ 1300 சிற்றூழியர்கள் அண்மையில் பணி நிரந்தரம் ஆக்கப்பட்டனர். இவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகளிடம் பணமில்லை.

ஐம்பது மில்லியனுக்கு மேற்பட்ட வருமானம் பெறும் உள்ளூராட்சிச் சபைகள் தத்தமது ஊழியர்களுக்குரிய நிதியை தாமே வழங்க வேண்டும் என்ற சட்டத்தைச் சற்று தளர்த்தி, இச்சபைகள் தத்தம் செலவுகளைத் தாமே ஈட்டிக் கொள்ளும் வரையில் ஓர் இடைக்கால நிவாரணமாக இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்கு இச்சபைகளுக்கு நிதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

உள்ளூராட்சிச்சபைகள், குப்பைகளை அகற்றுதல், தெருவிளக்கு போடுதல், உள்ளூர் வீதிகளை பராமரித்தல் முதலிய பணிகளை செய்வன என்று இல்லாமல் அவற்றுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். முன்னேறிய நாடுகளில் உள்ளூராட்சிச் சபைகள் கூடுதல் அதிகாரங்களை கொண்டுள்ளதை நாம் காணலாம்.

எடுத்துக்காட்டாக ஏறத்தாழ ஐந்து மில்லியன் மக்களைக் கொண்ட ரொறோன்டோ நகரத்தின் காவல்துறை ஆணையாளரை, அந்த மாநகர தலைவரே நியமிக்கின்றார் என்பது இதற்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகும்.

இத்தேர்தலில் இல்லா விட்டாலும் அடுத்த தேர்தலில் ஆவது மதிப்புக்குரிய மஹிந்த தேசப்பிரிய அவர்களது தலைமையில் நியமிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபை எல்லை நிருணயக் குழுவின் பரிந்துரைக்கு அமைய, உள்ளூராட்சிச் சபை உறுப்பினரது எண்ணிக்கையை 8356 இல் இருந்து 4714 ஆக குறைக்குமாறும் இதன் மூலம் அரசு செலவினத்தில் ஆண்டுக்கு ஏறத்தாழ 750 மில்லியன் ரூபாவை மீதுப்படுத்துமாறும் வேண்டிக் கொள்கின்றேன்.

உள்ளூராட்சிச்சபை நியதிசட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அறவிடப்படும் வரிகள் மற்றும் கட்டணங்கள் நீண்ட காலத்திற்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டவை ஆகும். இந்த வரி மற்றும் கட்டணங்கள் அறவீட்டு செலவானது வரியால் கிடைக்கும் வருவாயினை விடவும் அதிகமாக காணப்படுகின்றது. எனவே காலத்திற்கு ஏற்றவாறு உள்ளூராட்சிச் சபைகள் அறவிடும் வரிகள் மற்றும் கட்டணங்கள் சீர்செய்யப்படக் கூடிய வகையில் நியதி சட்ட ஏற்பாடுகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதோடு உள்ளூராட்சிச் சபைகள் வினைத்திறனாக இயங்கக் கூடிய வகையில் அவற்றினது துணைவிதிகள் மறுசீரமைக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அரசின் புதிய எண்ணியமயமாக்கல் கொள்கையின் ஊடாக பொது நிர்வாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி ஆகிய கட்டமைப்புகளின் கீழ் சிறப்புத் தேவை உடையோருக்கு வேலைக்கான ஆட்சேர்ப்பில் ஐந்து சதவீதமான இட ஒதுக்கீடு வழங்க ஆவன செய்ய வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கிறேன்.

இந்த நாட்டின் குடித்தொகையில் 52 வீதமாக உள்ள பெண்களுக்கு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர் தெரிவில் 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் திருகோணமலை மாவட்டத்தில் அடங்கும் உள்ளூராட்சிச் சபைகள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் மாவட்ட எல்லைகள் தொடர்பான தெளிவின்மை காணப்படுகின்றது. இதனால் தேவையற்ற குழப்பங்கள் மற்றும் முரண்பாடுகள் உருவாகின்றன. இவற்றை தவிர்க்கும் பொருட்டாக நில அளவைத் திணைக்களம் மற்றும் குறித்த எல்லைகள் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் துணையோடு மேற்கூறிய எல்லைகளைத் தாமதம் இன்றி தெளிவுபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கின்றேன்.



# கல்முனை வலயத்துக்கு அஷ்ரப் தாஹிர் வருகை

(பாறுக் ஷிஹான்)

தேசியரீதியாகஇரண்டாம்இடத்தைதக்க வைத்து தேசிய ரீதியில் மிளிரும் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் திங்கட்கிழமை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது தேசிய ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டமைக்காக வாழ்த்துக்களை தெரிவித்திருந்ததுடன் அங்குள்ள தேவைகள் குறித்து வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹிதுல் நஜீம் அவர்களுடன் விரிவாக கலந்துரையாடியிருந்தார்.

மேலும் அங்கு பணிபுரியும் வலயக் கல்வி அலுவலக உதவி கல்வி, பிரதி கல்வி பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் கல்முனை கல்வி வலய கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# புதைக்கப்பட்ட ஆயுதங்களைத் தேடி கிண்ணியாவில் பொலிஸ் தேடுதல்

(ஹலால்தீன்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்பாறு பகுதியில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து, அவ்விடத்தை அகழும் பணி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது.

திருகோணமலை குற்ற விசாரணை புலனாய்வு பணியக பிரிவும், கொழும்பு குற்ற விசாரணை புலனாய்வு பிரிவும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

செவ்வாய்க்கிழமை, திருகோணமலை குற்ற விசாரணை புலனாய்வு பணியக பிரிவு, கிண்ணியா பொலிஸ் ஊடாக, நீதிவான் நீதிமன்றத்தில், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின், ஏ.ஆர். 155ஃ2025 வழக்கின் பிரகாரம், நீதிவான் கே. ஜீவராணியால் நிலத்தை அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதியே இது எனவும் தெரிய வருகின்றது.





இக்காலப் பகுதியில், பொது மக்களின் குடியிருப்பு பிரதேசமாக காணப்பட்டது. யுத்த சூழ்நிலை உக்கிரமடைந்தபோது 1990 ஆம் ஆண்டு கடைசி பகுதியில் அங்கிருந்து மக்கள் வெளியேறினார்கள்

மீண்டும் 2011 ஆம் ஆண்டு பொதுமக்கள் இங்கு மீள்குடியேறினர். அன்றிலிருந்து இன்று வரை எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர் .

இந்தநிலையில்கொழும்புகுற்றபுலனாய்வு பணியக பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து, அவ்விடத்திற்கு திங்கட்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவினர் வருகை தந்து பலத்த பாதுகாப்பும் வழங்கப்பட்டது

இதன் பின்னரே செவ்வாய்க்கிழமை அவ்விடத்தை அகழும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த அகழ்வு நடவடிக்கையின் போது, கிண்ணியா பொலிஸ் பொறுப்பதிகாரி கிலய்மன் பெனாண்டோ, திருகோணாமலை மாவட்ட குற்ற விசாரணை பணியகப் பிரிவு பொறுப்பதிகாரி எம். எஸ்.நஜீம், கொழும்பு குற்ற விசாரணை பணியகப்பிரிவு அதிகாரி சந்தன,திருகோணாமலைமாவட்ட தடையியல் ஆய்வு பிரிவு இக்குழுவின் பொறுப்பதிகாரி எ.சிவதர்சன்,திருகோமலை மாவட்ட விசேட அதிரடி பிரிவு குழுவின் தலைவர் உதவி பொலிஸ் பரிசோதகர் பி.சாந்த, கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி, அப்பகுதிக்கான கிராம சேவை அதிகாரி உட்பட பலர் சமுகம் அளித்திருந்தனர் .

இந்த நடவடிக்கையின் போது எவ்வித ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. மீண்டும் தோன்றிய மடுவை மூடினார்கள்.



# சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் அம்பாறை மாவட்டக் காரியாலயம் திறந்து வைப்பு

(அஷ்ரப்கான்)

சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் அம்பாறை மாவட்ட காரியாலயம் அண்மையில் உத்தியோகபூர்வமாக சாய்ந்தமருதில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அமைப்பின் இலங்கைக்கான பொது பணிப்பாளர் துவான் ரிஸ்வான் காசிம் கலந்து கொண்டதுடன் காரியாலயத்தை உத்தியோகபூர்வமகாக திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி சம்சுதீன் மற்றும் விசேட அதிதிகளாக இவ்வமைப்பின் இலங்கைகான பொதுச்செயலாளர் மனோஜ் சஞ்சீவ, கொழும்பு மாவட்ட பணிப்பாளர் கோசலா கஜாநாயக, கண்டி மாவட்ட இளம் பணிப்பாளர் மஹ்மூத் மற்றும் சாய்ந்தமருது 06 ஆம் பிரிவு கிராம சேவகர் திருமதி ஸஹ்னாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



இங்கு அம்பாறை மாவட்ட அங்கத்தவர்களுக்கான அங்கத்துவ அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில்கலந்துசிறப்பித்த சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புமையதின் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஸ்வர், செயலாளர் நிஷார், கணக்கு பரிசோதகர் ஹிம்தாட், பொருளாளர் ரஷீட், உதவி செயலாளர் முஜீப் மற்றும் உறுப்பினர்களுக்கும் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் திருமதி ஏ.ஜே.எப். பைருஷா நன்றிகளை தெரிவித்தார்.





# மட்டு. மாவட்ட எல்லை பிரச்சினையை விசேட குழுவை அமைத்துத் தீருங்கள்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை

(சினீஸ் கான்)

எமது நாட்டில் பல்வேறு பட்ட பிரச்சினைகள் பல ஆண்டுகளாளாக தீர்க்கப்படாமல் காணப்படுகின்றன. இவைகள் நீங்கள் ஆட்சிக்கு வந்த பின் உருவான பிரச்சினைகள் அல்ல. ஒவ்வொரு பிரதேசங்களிலும் மாவட்டங்களிலும் நீண்ட காலமாக இருந்து வருகிறது என்றாலும் மக்கள் உங்கள்மீது நம்பிக்கை வைத்து உங்களை ஆட்சிக்கு கொண்டுவந்திருக்கிறார்கள். எனவே இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென உரிய அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் வலியுத்துகிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்ததலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 2025 வரவு - செலவுத்திட்டத்தின் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கான எல்லைகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. பானம்பலன என்ற ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் சிபாரிசுகளை முன்வைத்திருந்தது. இந்த சிபாரிசுகளின் அடிப்படையில் நாட்டில் பல்வேறுபட்ட பகுதிகளில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட நிலையிலும் கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலக பிரிவின் பிரதேச சபையும் இன்னும் உருவாக்கப்படாமல், எல்லைகள் நிர்ணயிக்கப்படாமல் நிர்வாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே பானம்பலன ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கும் அமைவாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று! மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரதேச செயலகங்களின் எல்லைகள் இன்றளவில் நிர்ணயிக்கப்படவில்லை. நிர்வாகம் ஒரு செயலகம், காணி ஒரு செயலகம் என்று யுத்தத்தால் ஏற்பட்ட பிரச்சினைகளால் குளறுபடிகள் தோற்றம் பெற்றுள்ளன. பொது நிர்வாக அமைச்சு ஊடாக விஷேட குழு ஒன்றை நியமித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# கனமூலை மெக் கல்வி நிறுவன பரிசளிப்பு விழா நிகழ்வுகள்

(சியாஜ்)

கனமூலை மெக் கல்வி நிறுவனத்தின் கணிதப் போட்டி, சித்திர போட்டி, சிதம்பராப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் மூன்றாம் தவணை பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக நிறுவனத்தின் ஸ்தாபகர் ஏ.எம்.எம் நஜீப் கலந்து கொண்டார், விசேட அதிதிகளாக மெக் கல்வி நிறுவனத்தின் தலைவர் இஹ்திஸாம், சிறப்பு அதிதியாக கஜுவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் ஆசிரியர்களான றிப்கான், ஹரிஸ், றினாஸ் மற்றும் அரூஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.





## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(03) இலங்கை நேரப்படி பி.ப 2.00 மணிக்கு நடைபெற்ற அமர்வில், 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அதன் சமகால நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் வாய்மொழிமூல அறிக்கை வாசிக்கப்பட்டது.

அதன்படி இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் தண்டனைகளிலிருந்துதப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக்கொண்டுவந்து, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறை குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டது.

அதனையடுத்து இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐ.நா மனிதஉரிமைகள்பேரவையில்கருத்துரைத்த சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவின் சர்வதேச சட்ட ஆலோசனைப்பிரிவின் பணிப்பாளர் சான்ரா இபால்-ரட்ஜென், இலங்கையில், குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களில் மோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டியது அவசியம்எனபேரவையிடம்வலியுறுத்தினார்.

அத்தோடு முன்னைய அரசாங்கத்தைப் போன்று, தற்போதைய புதிய அரசாங்கமும் செயற்பாட்டாளர்களை இலக்குவைப்பதற்கும், அவர்களை வலுகட்டாயமாகத் தடுத்துவைப்பதற்கும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதாகவும் அவர் கரிசனை வெளியிட்டார்.

மேலும், 'கடந்தகால மீறல்கள் தொடர்பில் உள்ளகப்பொறிமுறையின் ஊடாக இன்னமும் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாமல் இருப்பதானது, மீறல் குற்றங்கள் குறித்து ஆராய்வதற்கான தன்முனைப்பு இல்லை என்பதையும், அதற்கு உள்ளகப்பொறிமுறை போதுமானது அல்ல என்பதையும் காண்பிக்கின்றது.

அதுமாத்திரமன்றி அண்மையில் அரசாங்கத்தினால் போதுமானளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததன் காரணமாக பாரிய மனிதப்புதைகுழி அகழ்வு விசாரணை செயன்முறை இடைநிறுத்தப்பட்டுள்ளமையும் அவதானத்துக்குரிய விடயமாகும்' என்றும் சான்ரா இபால்-ரட்ஜென் சுட்டிக்காட்டினார்

## மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

போர்க்காலத்திலும் அதற்கு பின்னரான காலத்திலும் எமது மீனவர்களின் வாழ்க்கை மிகவும்பின்தங்கியநிலையிலேயேஇருக்கிறது.

இந்திய மீனவர்களின் இழுவைப்படகு பிரச்சினைஅங்குபூதாகரமாகவெடித்திருக்கிறது. மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கு காப்புறுதி திட்டம் ஒன்றுகூட இதுவரை இல்லாமல் இருக்கிறது. அதனால்மீனவர்கள்தங்களின்உடமைகளை இழக்கும்போது அதற்கான இழப்பீட்டை வழங்குவதற்கான நடவடிக்கையை ஆளும்தரப்பு மேற்கொள்ளவேண்டும்.

மேலும் இந்தியாவைப் பகைத்துக்கொள்ளாமல் இந்திய ட்ரோலர்கள் கடல் எல்லைக்குள் வருவதை நிறுத்த நடவடிக்கை எடுத்தால், அவர்களின் பிரச்சினைக்கு மாற்று திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கு தயாராக இருப்பதாக எமது மீனவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்ப்பாக நாங்கள் முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து கலந்துரையாடியபோது, ஆழ் கடல் மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தினால் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என நாங்கள் ஆலாசேனை தெரிவித்திருந்தோம்.

அதனால் ஆளும்தரப்பு இந்தப் பிரச்சினை குறித்துக் கலந்துரையாட தமிழ்நாடு மற்றும் இந்திய மத்திய அரசுகளுடன் கலந்துரையாட நடவடிக்கை எடுங்கள். அதற்கு நாங்கள் எமது ஒத்துழைப்பை வழங்க தயாராக இருக்கிறோம். அப்போது இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க வருவதற்கான வழி முறையை நாங்கள் தெரிவிப்போம்.

அதனால் இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் முல்லைத்தீவு அல்லது மன்னாரில் மீன்பிடி வளாகத்தில் மீன்பிடி துறைமுகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இதன் மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.

மீனவர் பிள்ளைகளுக்கு கடல்சார் கல்வியைவழங்குவதற்குநடவடிக்கைஎடுக்க வேண்டும் இதன் மூலம் மீனவர் சமூகத்தின் கல்விநிலைமுன்னேற்றமடையும். அதேநேரம் கடற்றொழில் நடவடிக்கையை முன்னேற்ற அமைச்சர் எடுக்கும் நடவடிக்கையை செயற்படுத்த வேண்டுமானால் அங்குள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியமாகும். ஊழல் அற்ற அதிகாரிகள் இருக்கவேண்டும். அதனால்அங்குநீண்டகாலமாகப்பணியாற்றும் அதிகாரிகளை இடமாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேநேரம் இந்திய இழுவைப் படகை வைத்துக்கொண்டு இந்தியாவுடன் நாங்கள் முரண்படவேண்டும் என்ற சிந்தனை ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதனை நாங்கள் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. இந்த விடயத்தில் சீனாவின் தலையீடும் இருந்து வருகிறது, சீனா இன்று வடக்கிலே எமது மீனவர்களுடன் எந்த அர்த்தத்தில் நாடுகின்றனர் என கேட்கிறேன்.

நிலங்களைக் கைப்பற்றுவதும் வளங்களை ஆக்கிரமிப்பதுமே சீனாவின் சிந்தனை. அதனூடாக வடக்கிலே எந்த நடவடிக்கையையும் நாங்கள் அனுமதிப்பதில்லை. வடக்கில் இந்தியாவை தவிரவேறுஒருநாடுமூக்கைநுழைவிப்பதற்கு நாங்கள் அனுமதிப்பதில்லை என்றார்.

## போராட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு சாதகமான தலையீடுகளை மேற்கொண்டுள்ளதால் பணிப்புறக்கணிப்பை பிற்போடுவதற்கு தீர்மானித்ததாகவும் அவர் கூறினார்.

மேலதிக கடமைக்கான கொடுப்பனவு, விடுமுறை கொடுப்பனவு என்பன குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை பணிப் -புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஏற்கனவே அறிவித்தது.

இதேவேளை, நாடு முழுவதும் இன்று நடத்த திட்டமிடப்பட்டிருந்த அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு சுகாதார நிபுணர்களின் சம்மேளனமும் தீர்மானித்துள்ளது.

வரவு, செலவுத் திட்டம் மூலம் சுகாதாரத் துறையின் கொடுப்பனவுகளைக் குறைப்பது தமது தொழிலையும் பாதிக்கும் என்று குற்றம் சாட்டி, இந்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க அவர்கள் தீர்மானித்திருந்தனர்.

இருப்பினும், நேற்று சுகாதார அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்துவதற்குதீர்மானித்துள்ளனர். அதன்படி, இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் மார்ச் 17 ஆம் திகதி காலை 8.00 மணி வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் அரச சேவையாளர்கள் உட்பட சுகாதார சேவையாளர்களின் சம்பளம் அதிகரிப்பட்டுள்ளது. வைத்தியர்களின் சம்பளம் முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒருசிலதரஅடிப்படையிலானவைத்தியர்கள் மற்றும் துணைநிலை மருந்தாளர்கள் வியாழக்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று குறிப்பிடப்படுகிறது.

சுகாதார சேவையாளர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக சுகாதார சேவையாளர்களின் சம்பளம், மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறைக்கான கொடுப்பனவு முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவையில் துணைநிலை மருந்தாளர் பிரிவில் மூன்றாம் தரத்தில் உள்ள வைத்தியரின் மேலதிக கொடுப்பனவு 285 ரூபாவினாலும், இரண்டாம் தரத்தில் உள்ள வைத்தியர்களின் மேலதிக கொடுப்பனவு 340 ரூபாவினாலும், முதலாம் தரத்தில் உள்ள வைத்தியர்களின் மேலதிக கொடுப்பனவு 415 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் விடுமுறைக்கான கொடுப்பனவில் மூன்றாம் தரத்தின் கொடுப்பனவு 200 ரூபாவினாலும், இரண்டாம் தரத்தின் கொடுப்பனவு 251 ரூபாவினாலும், முதலாம் தரத்தின் கொடுப்பனவு 325 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரச சேவையாளர்களின் சம்பளம், மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறைக்கான கொடுப்பனவு என்பன அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆகவே இந்தச் சம்பள அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு சுகாதார சேவையாளர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருசில தொழிற்சங்க தலைவர்களின் தவறான வழிநடத்துலுக்கு அமைவாக செயற்பட வேண்டாம் என்று சுகாதார சேவையாளர்களிடம் வலியுறுத்துகிறேன். பிரச்சினைகள் காணப்படுமாயின் பேச்சு நடத்தலாம் .ஆகவே பொதுமக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்காமல் சேவையில் ஈடுபடுமாறு சுகாதார சேவையாளர்களிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## இலங்கையைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைதுஅனுசரணை நாடுகளின் தூதரகங்களிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி இதனை தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார், பொதுச்செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ள அக்கடிதத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மேலும் தெரிவித்துள்ளதாவது

2021 ஜனவரி 15 பெப்ரவரி 24 செப்டம்பர் 8 ம் திகதியும் 2022 பெப்ரவரி 25 கூட்டாக வெளியிட்ட கடிதங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அந்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே, தீர்மானத்தின் நகல்வடிவம் வெளியாவதற்கு முன்னரே நாங்கள் முன்னைய தீர்மானங்கள் குறித்து ஏமாற்றமடைந்துள்ளோம் அவை பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை, குறிப்பாக சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் என தெரிவித்திருந்தோம்.

இந்த விவகாரங்கள் தொடர்பான தீர்மானங்கள் பிரச்சினைக்குரியவையாக காணப்படுகின்றன, இவை அரசியல் சூழமைவைசரியாகஇனம்காணதவறிவிட்டன, என தெரிவித்த நாங்கள் பின்வரும் விடயங்களை குறிப்பிட்டிருந்தோம். அனைத்து முன்னைய தீர்மானங்களும் ஜெனீவாவில் பொறுப்புக்கூறலை தேக்கமடையச் செய்கின்றன. மேலும் இவை இலங்கைக்கு காலஅவகாசத்தை வழங்குகின்றன.

ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையில் இரண்டு உறுப்பினர்களை கொண்டுள்ள இணைஅனுசரனைநாடுகள், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்காகஐக்கியநாடுகள்பாதுகாப்பு சபையில்தீர்மானத்தைகொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என நாங்கள் கேட்டிருந்தோம்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு உதவும் வகையில் ஆதாரங்களை சேகரிப்பதற்கான சுயாதீனஅமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள்பொதுச்சபையில்சமர்ப்பிக்கவேண்டும் எனவும் நாங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

இலங்கையில்தொடரும்வன்முறைகளை கண்காணித்துஅறிக்கையிடுவதற்காக விசேட அறிக்கையாளரை நியமிக்கும் வகையிலும், வடக்குகிழக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகங்களை ஏற்படுத்தும் விதத்திலும் தீர்மானங்களில் மாற்றங்களை கொண்டுவரவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

பாதுகாப்பு அபிவிருத்தி தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பதற்காக அரசாங்கம் தொடர்ந்தும் இராணுவத்தையும் அரசதிணைக்களங்களையும் பயன்படுத்துவதையும் முன்னைய தீர்மானங்கள் கருத்தில் கொள்ள தவறிவிட்டன என்பதை நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம்.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான அலுவலகம் ஆகியவை குறித்துநம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் தீர்மானங்கள் காணப்படுவது குறித்த எங்கள் கரிசனையை வெளியிட்டிருந்தோம். இரு அலுவலகங்களும் அவை உருவாக்கப்பட்ட நோக்கம் அவற்றின் கட்டமைப்பு ஆகியவற்றில் தவறுகளை கொண்டவையாக காணப்படுகின்றன.

இதேவேளை தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான ஆரம்புள்ளியாக கூட 13வது திருத்தத்தை நாங்கள் ஏற்க தயாரில்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம். இலங்கை குறித்த முதலாவது தீர்மானம் 2012 இல் நிறைவேற்றப்பட்டு பல வருடங்களாகிவிட்டது. எங்களின் எச்சரிக்கைகள் ஒவ்வொன்று சரியானவை என்பது நிரூபணமாகியுள்ளது.

அரசியல் கைதிகளை தடுத்துவைப்பதற்கு பயன்படுத்தப்படும் சட்டம் நீதியானது இல்லை அதனை நீக்கவேண்டும் என நீதியமைச்சர் உட்பட முக்கிய அமைச்சர்கள் தெரிவித்துள்ள போதிலும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் வாடுகின்றனர்.

இலங்கையின் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் முன்னைய தீர்மானங்களை, இலங்கை விவகாரத்தில் தலையிடுபவை, அரசியல் நோக்கம் கொண்டவை என நிராகரித்துள்ளதுடன் உள்நாட்டு பொறிமுறைகள் குறித்து கவனம் செலுத்தப்படும் என தெரிவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ஆகக்குறைந்தது 2024 ஆகஸ்ட் முதல் யுத்தத்தின் போது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியமைக்காகவோ அல்லது மனித உரிமை மீறல்களிற்காகவோ எவரும்தண்டிக்கப்படமாட்டார்கள் என சிங்கள மக்களிற்கு மீண்டும்மீண்டும் உறுதியளித்துள்ளார். உருவாக்கப்படும் எந்த பொறிமுறையும் உண்மையை கண்டறிவதை நோக்கமாக கொண்டிருக்கும் பொறுப்புக்கூறலை நோக்கமாக கொண்டிராது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலைகளில் இந்த அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களை போல குற்றவாளிகளிற்கு எதிராக சுயவிருப்புடன்நடவடிக்கைகளை எடுக்காது என்பது மிகவும்தெளிவாக தெரியவந்துள்ளது.

குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவேண்டும் என்பதையே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வலியுறுத்திவருகின்றனர். மீளநிகழாமைக்கு இது மிகவும் அவசியம்.

கடும் கவலையை ஏற்படுத்தும் பின்னணியில் நீங்கள் எங்களின் இந்த கடிதத்திலும்முன்னைய கடிதத்திலும் வலியுறுத்தப்பட்ட விடயங்களை கருத்தில் எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம். பொறுப்புக்கூறல்மற்றும்பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதி என்ற அடிப்படையில் கடந்தகால தீர்மானங்களைபின்பற்றிகொண்டுவரப்படும் எந்த தீர்மானத்தினாலும் நாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் ஆதரவை பெறமுடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில்எதிர்காலத்தில்கொண்டுவரப்படும் தீர்மானம் தமிழ் மக்களின் சம்மதத்தினை பெறவேண்டும் என்றால் நாங்கள் இந்த விடயத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை அடிப்படையாக கொண்ட, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் ஏனைய சர்வதேச நீதி கட்டமைப்புகளிலும் பாரப்படுத்தும், புதிய தீர்மானம் அவசியம்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிகவிசாரணைகள்குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில்வைத்துமுன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ள விடயம் நேற்று தேசிய பத்திரிகைகளில் பிரதான செய்தியாக வெளிவந்துள்ளன. கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் இவ்விடயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக "கல்முனை பகுதிகளில் மத அமைப்புக்களினால் பிள்ளைகள் தீவிரவாத கற்பித்தலுக்காக பயன்படுத்தப்படுகிறார்கள்" என்றும்அதன்காரணமாகஉளவுத்துறையினர் கண்காணிப்புக்களை அதிகரிக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக் கூற்றினால் எமது பிரதேச மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

கூற்றுக்களில் பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அமைப்புக்களின் பெயர்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. கல்முனை ஜும்மா பள்ளிவாசல், பள்ளிவாசல் சம்மேளனம், ஜம் இய்யதுல் உலமா சபை உட்பட இஸ்லாமிய அமைப்புகள் உட்பட இஸ்லாமிய மக்கள் தீவிரவாதத்துக்கு எதிராகவே இருக்கிறார்கள். தீவிரவாதம் தொடர்பானவிசாரணைகளுக்கு தொடர்புடைய அதிகாரிகளுடன் ஒன்றிணைந்து செயற்பட தயாராகவுள்ளார்கள்.

எமது மக்கள் இதுபோன்ற வித்தியாசமான போக்குகள் உள்ள குழுக்களின் பின்னணியையும், அவர்களுக்கு யார் நிதி வழங்குகிறார்கள் என்பதையும் அறிந்துகொள்ள ஆர்வமாக உள்ளார்கள். புலனாய்வு விசாரணைகள் சட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

இதற்கு முன்னரும் முஸ்லிம் சமூகம் பல விடயங்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கை விடுத்தும் உரிய அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படாத காரணத்தால் சஹ்ரானின் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றது என்பதை அனைவரும் அறிவோம். பிறிதொரு சஹ்ரானின் சம்பவம் இந்த நாட்டில் இனி ஒருபோதும் தோற்றம் பெறக்கூடாது.

எம் மீது பழி சுமத்த பல தீய சக்திகள் முயற்சிக்கலாம். அமைச்சர்களின் கூற்றுக்களை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள இந்த சக்திகள் நிச்சயம் முயற்சிக்கும். ஆகவே தீவிரவாதத்தை தடுப்பதற்கு கல்முனை வாழ் மக்கள் எப்போதும் ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

அதிகாரபூர்மற்ற அறிவிப்புக்களினால் வீண் அச்சம் மற்றும் சந்தேகங்களை ஏற்படும். அத்தகைய நிலையை ஆளும்தரப்பு ஏற்படுத்தக் கூடாது. இவ்வாறான பொதுவான கூற்றுக்களினால் சமூகத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதம் செயல்படுகிறது என்ற பழைய தவறான அபிப்ராயம் மீண்டும் தோற்றுவிக்கப்படலாம். என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான கூற்றுக்களை கொண்டு பேரினவாதிகள் எங்களை முடக்க முயற்சிக்கலாம். இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பதம் இஸ்லாமிய கொள்கைகளுக்கு முரண்பட்டது என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்களின் கூற்றுக்களை தெளிவுப்படுத்தி ஆளும்தரப்பு பொதுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும். புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும் அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

நோன்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் இப்தார் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துகிறது. முஸ்லிம் வர்த்தகர்கள் பல கோடி பெறுமதியான விளம்பரங்களைவழங்குகிறார்கள். ஆனாலும் இதுவரை காலமும் இரவு வேளையில் 1 மணித்தியாலமாக ஒளிபரப்பப்பட்ட இரவு வேளைக்கான இஸ்லாமிய நிகழ்ச்சி நேற்று முன்தினம் வரை 45 நிமிடங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இதனை திருத்தம் செய்து கூட்டுத்தாபனம் வழமை போல் 1 மணித்தியாலத்துக்கு இஸ்லாமிய நிகழ்ச்சியை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## வீதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுவரவு-செலவுத் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சு மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு மீதான குழுநிலைவிவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய இழுவைப் படகுகள் செய்யும் அத்துமீறிய செயல்களினால் எமது வடக்கு மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எமது மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் சேதப்படுத்தப்படுகின்றன. வடக்குமீனவர்களின் வாழ்வு கேள்விக்குறியாக்கப்படுகின்றது. இந்திய விசைப்படகுகள் மீன்பிடியில் மிகவும் அழிவுகரமான முறைகளிலொன்றாகக் கருதப்படும் அடித்தள இழுவைவலைதொழிலை மேற்கொள்கின்றன. ஆழ்விசைப்படகுகள் கடலின் ஹூவர்ஸ். புல்டோசர்கள் போன்று மீன் மற்றும் பிற அடித்தள மீன் இனங்களை அழித்தொழிக்கின்றன.

இது தொடர்ந்தால் விரைவில் எந்த மீனும் கடலில் பிடிக்க இயலாத நிலை ஏற்படும்.

இலங்கையின் கடலோர மக்களில் பெரும்பாலானோர் மீன்பிடித்தல் அல்லது மீன்வளம் தொடர்பான தொழில்துறையை நம்பியுள்ளனர். அதுவே அவர்கள் அறிந்த ஒரே வாழ்வாதார நடவடிக்கை. அந்த வாழ்வாதார ஆதாரம் அழிக்கப்பட்டால், மனித பாதுகாப்பை பாதிக்கும் வகையிலான மிகப் பெரிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விளைவுகள் ஏற்படும். பெரும்பாலான எல்லைக்கடப்புகள் வேண்டுமென்றே இலங்கைக்கடல்எல்லைகளுக்குள் ஆழமாகப் பயணிப்பதை உள்ளடக்கியது. ராமேஸ்வரம் மீன்பிடிப் படகுகள் இலங்கைப்பகுதியில் மட்டுமே நல்ல மீன்பிடி மைதானங்களை காண்கின்றன. எனவே அவற்றின் பெரும்பாலான மீன்பிடித்தல் அந்தப்பக்கத்தால் இடம்பெறுகின்றதென்பது வெளிப்படையான ரகசியமும், உண்மையுமாகும்.

இலங்கைக் கடற்பரப்பில் பிரதானமாக இறால் பெறப்படுவதால் பெரும்பாலான விசைப்படகுகள் பெலாஜிக் அல்லது விரிகடலுக்குரிய இழுவை வலைகளுடன் ஜோடியாக இழுவை செய்யும் இந்திய விசைப்படகுகள், இலங்கைக் கடற்பரப்பை அடைகின்றன. ஒன்றை விட்ட ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 500 இழுவைப் படகுகள் இலங்கைக்கடற்பரப்புக்குள் அத்துமீறிய கடற்றொழிலில் ஈடுபடுகின்றன.

பல பாதுகாவலர்களும் சர்வதேச விஞ்ஞானிகளும் இழுவை வலைகள் கண்மூடித்தனமாக அனைத்து கடல் வளங்களையும் அழிப்பதால் அவற்றை முழுமையாக தடைசெய்ய வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர். இலங்கை அரசாங்கம் இலங்கை கடற்பரப்பில் அடித்தள இழுவைப்படகுகளை இயக்கத்தடைவிதித்தது.

இலங்கையின் வடக்கு பகுதியில் ஐந்து மாவட்டங்களில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களில் மீன்பிடியாளர்கள் தமது முழுமையான வாழ்வாதாரமாக மீன்பிடியையே நம்பியுள்ளனர். இந்தக் குடும்பங்களின் உணவுத் தேவைகள், பிள்ளைகளின் கல்வித்தேவை உட்பட அத்தியாவசியத் தேவைகள் இந்தக் கடலையே நம்பி, இதனால் கிடைக்கும் வருமானத்தை தமது வாழ்வாதாரமாக எண்ணி இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் மிகவும் கொடூரமான முறையில் சட்டவிரோத தொழில்கள் செய்து இலங்கை அரசினால் தடை செய்யப்பட்டதாக அறியத் தந்திருக்கும் தொழில்களைக் கொள்ளையர்களைப் போல செய்துகொண்டிருக்கும், திருட்டுக் கும்பலை பிடிக்காமல் சட்டத்தின் முன் நிறுத்தாமல் இருக்க காரணம்தான் என்ன? எமது மீனவர்களை வாழவிடுங்கள் என்று தான் கேட்கின்றோம். சட்டவிரோத கடற்றொழில்களைச் செய்து மீனவர் சமூகத்தை அழித்துக்கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள சட்டவிரோதிகளையும்இ எல்லைதாண்டிவந்து எமது கடல்வளங்களை அழிக்கும் அயல்நாட்டு சட்டவிரோதிகளையும் தண்டியுங்கள்.

எமது மக்களை மேலும், மேலும் காயப்படுத்தாமல் கடற்படை, பொலிஸார், கடற்றொழில் திணைக்களப்பணியாளர்கள் தங்களுடைய கடமைகளைச் சீராகச்செய்தால் நிலைமைகள் சீராகும்.

மீன்பிடிச் சட்டங்களை நடைமுறைக்கு கொண்டு வந்தால் இந்தப் பிரச்சினைகள் தீர்ந்து விடும். சட்டங்களை உருவாக்கி வைத்துக்கொண்டு, அதனை முழுமையாக செயற்படுத்தாமல் எமது மீனவமக்களின் வாழ்வைஅழித்துக்கொண்டு இருக்கின்றீர்கள்.

இந்திய இழுவைப்படகுகள் தமது எல்லைகளைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைகின்ற விவகாரத்தில் இந்திய அரசும், இந்திய கடற்படையினர் உள்ளிட்ட தரப்பினரும் பிழையான விதத்தில் செயற்படுகின்றார்கள். இந்திய கடல்எல்லையைத் தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் நுழைவதை இந்திய அரசும் இந்திய கடற்படையும் தடுக்கவேண்டும். அதேபோல் இலங்கைக் கடற்படையினரும் இந்த இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி எமது கடற்பரப்பிற்குள் நுழையும் விடயத்தில் பொறுப்பற்று செயற்படுகின்றனர்.

அண்மையில் மியன்மார் நாட்டு அகதிகள் படகொன்று முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு வருகைதந்தது. குறித்த அகதிகள்படகு முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு வருகைதரும்வரை கடற்படையினருக்குத் தெரியாது. அவ்வாறெனில் கடற்படையினர் என்ன பார்த்துக்கொண்டிருக்கின்றனர்? இலங்கைக் கடற்பரப்பினைப் பாதுகாக்கவேண்டியது இலங்கைக் கடற்படையின் பொறுப்பு . இல்லையேல் வடக்கில் முல்லைத்தீவு மன்னார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி நான்கு மாவட்டங்களிலும் மீனவ மக்கள் வீதியில் இறங்கி போராடுவார்கள். அந்த நிலையை ஏற்படுத்தாதீர்கள் என்றார்.




காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# புதிய பாலம் அமைத்து தரக் கோரிக்கை

(நௌபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தாஹாநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்திருக்கும் கொல்லனாற்றுபாலம் சேதமடைந்து பயன்படுத்தமுடியாதவாறு ஆபத்தான நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது 1972 - 1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டதாகவும் இது 50 வருடங்களளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதாகவும் கூறும் பொதுமக்கள் இப்பாலத்தினை இப்பகுதி பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும், அரச அலுவலர்களும் மிக அதிகமாக பயன்படுத்தும் பாலமாக இது காணப்படுவதாகவும் கூறுகின்றனர்.

உழவு இயந்திரங்கள், டிப்பர்கள்வாகனங்கள் போன்ற கனரக வாகனங்களும் போக்குவரத்து செய்யும் பாலமாகவும் இது காணப்படுகிறது.

தற்போது இப்பாலம் கனரக வாகனங்கள் சென்றுவருவதற்கு தகுதியற்ற ஆபத்தான நிலையில் இது காணப்படுவதுடன் அதன் மேல் பயணம் செய்யும் பொதுமக்களும் வாகன ஓட்டுநர்களும் பீதியுடனேயே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் கூறுகின்றனர்.

எனவே புதிய பாலமொன்றை அமைத்துத்தருமாறும் உரிய பகுதியினரிடம் இங்குள்ள பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# கற்பித்த ஓய்வுநிலை ஆசிரியர்களுக்கு கௌரவமும் விசேட ஒன்றுகூடலும்

(றமீஸ்)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த 1986 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் கல்விப் பொதுத்; தராதரப் பத்திர சாதாரண தரத்தில் கல்வி பயின்ற மாணவர்களை ஒன்று சேர்த்து சுவிஸ் நாட்டின் அன்டனி மெல்டஸினால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் மருதமுனை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது கல்லூரியின் தற்போதைய அதிபர் அருட் சகோதரர் றெஜினோஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதன்போது நிகழ்வின் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்ட இப்பாடசாலையில் கற்பித்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பிரதம அதிதி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இதன்போது 86 சாதாரண தர மாணவர்களின் குடும்ப உறவுகள் கலந்து கொண்டதோடு, வருமானம் குறைந்த மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு நீண்ட காலமாக உதவி புரிந்து வரும் அன்டனி மெல்டஸின் பாரியாரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய ரீதியில் வெற்றிபெற்ற மாணவனுக்குக் கௌரவம்



கல்வி அமைச்சினால் கடந்த 2024 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட 'சமூக விஞ்ஞானபோட்டியில்'தேசிய ரீதியில் நான்காம் இடத்தைப் பெற்ற நற்பிட்டிமுனை கமுஃ லாபிர் வித்தியாலய மணவன் எச். அப்ரி அஹமட்டை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் சீ.எம்.நஜீப் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி சீ.எம். ஹலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



மாணவனின் பெற்றோர் மற்றும் மாணவனை கற்பித்து வழப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டதுடன் அதிதிகளால் நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# நிந்தவூரின் விளையாட்டுத்துறை தொடர்பாகக் கலந்துரையாடல்

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூரின்விளையாட்டுத்துறைபின்தங்கிய நிலையில் உள்ளதற்கான காரணங்களை கண்டறிந்து அதற்கு புத்துயிரளிக்கும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் நிந்தவூரின் விளையாட்டு துறை சார்ந்த பிரதிநிதிகளுடனானகலந்துரையாடலொன்று திங்கட்கிழமை மேற்கொண்டிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலை முதல் சர்வதேச மட்டத்திற்கு விளையாட்டு வீரர்களை உருவாக்குவதில் உள்ள தடைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான தீர்வு திட்டங்களும் ஆலோசிக்கப் பட்டிருந்தது.

மேலும், தொடர் முயற்சியின் மூலம் எமது வீரர்களை உருவாக்குவது என்ற அடிப்படையில் நாம் தொடர்ச்சியாக செயற்படுவதை உறுதி எடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் விளையாட்டு ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா மாவட்ட செயலகத்தில் மாபெரும் தொழில் சந்தை

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் மாபெரும் தொழில் சந்தை நேற்று (புதன்கிழமை) வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட செயலாளர் சரத் சந்திர, உதவி மாவட்ட செயலாளர் சாபர்ஜா, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நா.கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் காஞ்சனா குமார ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

இத்தொழில் சந்தையில் 30 இற்கு மேற்பட்ட நிறுவனங்கள் வருகை தந்திருந்ததுடன், 100 இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்பினை பெறும் நோக்குடன் கலந்துகொண்டிருந்தனர். (100)













# உணவக உரிமையாளர்களுக்கு ஆலோசனையுடன் எச்சரிக்கை

(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட கடற்கரைவீதியிலுள்ள உணவகங்கள் நேற்று(புதன்கிழமை) திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் கியு.ஆர் ஸ்டிக்கரும் ஒட்டப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் முதலானோர் கலந்து கொண்டனர்.





இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றவகையில்உணவைக்கையாண்ட உணவக உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் அந்த உணவகங்களில் கடமைபுரியும்ஊழியர்கள்கட்டாயம்மருத்துவ சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகரால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் பொதுமக்கள் உணவு கையாளும் நிறுவனங்களில் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை உடனடியாகஅறிவிப்பதற்குகியு.ஆர்.ஸ்டிக்கரும் உணவகங்களில் ஒட்டப்பட்டமையால் பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை கியூ.ஆர். ஸ்கான் செய்வதன் மூலம் உணவகங்களில்ஏற்படும்பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் குறிப்பிட்டார்.

இதேவேளைசாய்ந்தமருதுசுகாதாரவைத்திய அதிகாரிஅலுவலகத்திற்குட்பட்ட உணவகங்கள் மற்றும்நோன்புக்கஞ்சிதயாரித்து விநியோகம் செய்யும் பள்ளிவாசல்கள் முதலானவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது உணவகங்களில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் உணவைக் கையாண்ட இரண்டு உணவக உரிமையாளர்களுக்குஎதிராகசட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவ் உணவுப்பண்டங்கள்உணவகஉரிமையாளரின் அனுமதியுடன் அழிக்கப்பட்டன.

மேலும் பொதுமக்கள் உணவு கையாளும் நிறுவனங்களில் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை உடனடியாக அறிவிப்பதற்கு கியு.ஆர். ஸ்டிக்கரும் உணவகங்களில் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மாத்திரைகளை உட்கொண்ட முல்லைத்தீவில் குழந்தை சாவு

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கற்குவாறி பகுதியில் உள்ள வீடொன்றில் குழந்தையின் பெற்றோரால் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த மாத்திரைகளை எடுத்து உட்கொண்டதில் ஒன்றரை வயதுடைய ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

மாத்திரைகளை உட்கொண்ட நிலையில் செவ்வாய்க்கிழமை மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கபட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

# விவசாயிடம் இலஞ்சம் பெற்ற கமநல உத்தியோகத்தர் கைது

## மட்டு செங்கலடியில் சம்பவம்

மட்டக்களப்பு சித்தாண்டியில் விவசாயின் வயலுக்கு உரம் மற்றும் மழை வெள்ளத்தால் வேளாண்மை சேதமடைந்தமைக்கு நஷ்டஈடு பெற்றுத் தருவதற்காக 50 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்ற கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரை இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினர் நேற்று (புதன்கிழமை) கைது செய்துள்ளனர்.

இது பற்றி தெரியவருவதாவது -

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சித்தாண்டி பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் வயலுக்கு உரம் மற்றும் மழை வெள்ளத்தால் வேளாண்மை சேதமடைந்தமைக்கு நஷ்டஈடு பெற்றுத் தருவதற்காகவும் விவசாயிடம் 50 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக கோரியுள்ளார்.

இதனையடுத்து குறித்த விவசாயி கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினரிடம் இது தொடர்பில் முறைப்பாடு அளித்துள்ளார்.

பின்னர், செங்கலடி பகுதியிலுள்ள வங்கி ஒன்றிற்கு அருகில் வைத்து கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் விவசாயிடமிருந்து 50 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொண்ட நிலையில் அதனை கண்காணித்துக் கொண்டிருந்த இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரை கைது செய்து 50 ஆயிரம் ரூபாவை மீட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 34 வயதுடையவர் எனவும் சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தி கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2025இல் வெளியிடப்பெற்றது